In Public domain. Digitization Muthulakshmi Research Academy

शिवोत्कर्षमञ्जरी

ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ

மொழிபெயர்ப்பு :
Dr. தி. கணேசன்
சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர்
பாண்டிச்சேரி.

வெளியீடு :
ஶங்கரா ஆய்வு நிறுவனம்
தென்காசி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶதாபிஷேக விழா மலர்

தம்பதிகள்

கயிலை ஶிவஸ்ரீ S. ராமநாத–அகோர ஶிவாசார்யார்

ஸ்ரீமதீ கங்கா–பர்வதவர்த்தினி

மணல்மேடு.

11-03-2010

n Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
ஸ்ரீ குருப்யோநம:

ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்
இயற்றிய

ஸ்ரீ ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ

மொழிபெயர்ப்பு
ப்ரஹ்மஸ்ரீ Dr. ஸ்ரீ T. கணேஶன்
பாண்டிச்சேரி

மயிலாடுதுறை வட்டம், மணல்மேடு
ஸ்ரீமத் ஸௌந்தரநாயகீ ஸமேத ஸ்ரீமந் நாகநாதஸ்வாமி திருக்கோயில் அர்ச்சகர்
கயிலை ஶிவஸ்ரீ S. ராமநாத அகோர ஶிவாசார்யார்-ஸ்ரீமதீ கங்கா-பர்வதவர்த்தினி
தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** மலர்

ஸ்வஸ்திஸ்ரீ விரோதி ஸூ, மாசி மீ, 27 உ

11.03.2010 வியாழக்கிழமை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல்விளக்கக் குறிப்பு

பெயர்	-	ஸ்ரீ ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ
பொருள்	-	ஶிவபெருமானின் மஹிமை
ஆசிரியர்	-	ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்
மொழிபெயர்ப்பு	-	ப்ரஹ்மஸ்ரீ Dr. T.கணேஶன், பாண்டிச்சேரி
வெளியீடு	-	கயிலை-ஶிவஸ்ரீ S. ராமநாத-அகோர ஶிவாசார்யார், மணல்மேடு
மொழி	-	ஸம்ஸ்க்ருதம், தமிழ்.
எழுத்து	-	தேவநாகரீ, தமிழ்
எழுத்து அளவு	-	13 புள்ளிகள்
அளவு	-	1/8 Size
தாள்	-	மேப்லித்தோ
பக்கங்கள்	-	128
ப்ரதிகள்	-	500
வடிவமைப்பு	-	ஸ்ரீஶங்கரா ஆய்வு நிறுவனம், தென்காசி.
அச்சிடல்	-	ஸ்ரீ ஸுந்தரம் ப்ரிண்டர்ஸ், தென்காசி.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ

ஓம்

இந்நூல்

மயிலாடுதுறை வட்டம், மணல்மேடு

முப்போதும் திருமேனிதீண்டும் ஆதிஶைவர்

ஶ்ரீமத் ஸௌந்தரநாயகீ ஸமேத ஶ்ரீமந் நாகநாதஸ்வாமி திருக்கோயில் அர்ச்சகர்

கயிலை ஶிவஶ்ரீ S. ராமநாத-அகோர ஶிவாசார்யார்-ஶ்ரீமதீ கங்கா-பர்வதவர்த்தினி

தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** நன்னாளில்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன குருமஹாஸன்னிதானம்

ஶ்ரீ-ல-ஶ்ரீ ஷண்முகதேஶிக ஞானஸம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்,

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமஹாஸன்னிதானம்

ஶ்ரீ-ல-ஶ்ரீ ஶிவப்ரகாஶதேஶிக பரமாசார்ய ஸ்வாமிகள்,

திருப்பனந்தாள், காசித்திருமடம், காஶிவாஸி

ஶ்ரீ-ல-ஶ்ரீ முத்துக்குமாரஸ்வாமித் தம்பிரான் ஸ்வாமிகள்,

ஆகியோரது அருளாசியுடன்

வெளியிடப்பட்டது.

11.03.2010

ஶுபம்.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ

ஶிவமயம்

ஶிவாகம கலாநிதி, ஶிவநெறிச்செம்மல், விகாஸ ரத்ன, டாக்டர்

ஶிவஶ்ரீ. K.பிச்சை ஶிவாசார்யார் அவர்கள்

தலைமை அர்ச்சகர், ஸ்ரீ கற்பகவிநாயகர் திருக்கோயில்,

முதல்வர், ஸ்ரீ கற்பகவிநாயகர் வேதாகம வித்யாலயம்,

ஸ்தாபகர், ஶிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி.

ஶுபம்.

ஆசியுரை

தமிழகத்தின் பெருமையை உலகெங்ஙனும் பறைசாற்றும் வகையில், பன்னெடுங்காலமாக லண்டன் மாநகரத்து முருகன் திருக்கோயில் தலைமை அர்ச்சகராகப் பணியாற்றும், மயிலாடுதுறை வட்டம், மணல்மேடு க்ராமத்தைச் சேர்ந்த **ஶிவாகம ப்ரவீணர், கயிலை ஶிவஶ்ரீ R. நாகநாதஶிவம்** அவர்களின் பெற்றோர், **கயிலை ஶிவஶ்ரீ S. ராமநாத அகோர ஶிவாசார்யார் ஸ்ரீமதீ கங்காபர்வதவர்த்தினி** தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** வரும் 11.03.2010 அன்று நடைபெறவிருப்பதும் அவ்விழாவில் **ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்** இயற்றிய **"ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ"** என்ற நூல்வெளியிட இருப்பதும் அறிந்து மகிழ்கிறோம்.

தம்பதிகள் கனகாபிஷேகம் கொண்டு வாழ்வாங்கு வாழவும், நூல்வெளியீடு சிறக்கவும் **எல்லாம்வல்ல கற்பகவிநாயகப் பெருமானின்** திருவடிக்கமலங்களைப் போற்றிப்பணிகின்றோம்.

அன்புடன்

ஶிவஶ்ரீ K. பிச்சைக் குருக்கள்,

பிள்ளையார்பட்டி

Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

ஶிவமயம்

ஶிவாகம ஶிரோமணி,

ஶிவாகம கலாநிதி, **ஶிவஶ்ரீ. S.K.** ராஜா பட்டர் அவர்கள்

ஸ்தானிகர், ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஸ்வாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம்

அர்ச்சகர், ஸ்ரீ மீனாக்ஷிஸுந்தரேஶ்வரர் திருக்கோயில், மதுரை

முதல்வர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

வாழ்த்துரை

லண்டன் அருள்மிகு முருகன் திருக்கோயில் தலைமை அர்ச்சகர் **ஶிவாகம ப்ரவீணர், கயிலை ஶிவஶ்ரீ R. நாகநாதஶிவம்** அவர்களின் பெற்றோரும், மயிலாடுதுறை வட்டம், மணல்மேடு க்ராமம் **அருள்மிகு ஸௌந்தரநாயகீ உடனமர் ஸ்ரீமந் நாகநாதஸ்வாமி திருக்கோயில்** அர்ச்சகருமாகிய முப்போதும் திருமேனி தீண்டும் ஆதிஶைவப்பெருந்தகை **கயிலை ஶிவஶ்ரீ S.** ராமநாத அகோர **ஶிவாசார்யார்-ஸ்ரீமதீ கங்காபர்வதவர்த்தினி** தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** 11.03.2010 அன்று நடைபெறவிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

அவ்விழாவில் **ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்** இயற்றிய ஶிவபெருமானின் மஹிமையை விளக்கும் **“ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ”** என்ற நூல்வெளியிட இருப்பது மிகவும் போற்றத்தக்க செயல் ஆகும்.

தம்பதிகள் பல்லாண்டு வாழவும், இந்நூலை வெளியிடுவோருக்கும், மற்றோருக்கும் ஸகலநலன்களும் உண்டாகவும், **திருப்பரங்கிரிதனில் கோயில்கொண்டருளும் தெய்வானை மணாளன் முருகப்பெருமானின்** சரணகமலங்களை உளமாரப் பணிந்து வேண்டுகின்றோம்.

அன்புடன்

ஶிவஶ்ரீ S.K ராஜா பட்டர்

திருப்பரங்குன்றம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ
ஶிவமயம்

ஶிவாகம கலாநிதி, ஶிவாகம ப்ரவீணர், ஶைவஸித்தாந்தஶரபம்

ஶிவஸ்ரீ. A.V. ஸ்வாமிநாத ஶிவாசார்யார் அவர்கள்

முதல்வர், ஶிவபுரம் வேதஶிவாகம பாடசாலை, மயிலாடுதுறை.

வாழ்த்துரை

ஸமயக்குருமார்களாகிய நால்வர் பெருமக்களால் போற்றிப்பரவப் பெற்ற திருக்கோயில்கள் பலவற்றையும், சிவநெறிக் கருவூலங்களாக விளங்கும் சைவஆதீனங்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் தஞ்சைப்பதியில் மணல்மேடு க்ராமத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் நாகஸ்நாதஸ்வாமியையும் எம்பிராட்டி ஸௌந்தரநாயகி அம்பிகையையும் திருமுழுக்காட்டி வழிபடும், **கயிலை ஶிவஸ்ரீ S. ராமநாத அகோர ஶிவாசார்யார்-ஸ்ரீமதீ கங்காபர்வதவர்த்தினி** தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** வரும் 11.03.2010 அன்று நடைபெறவிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

அவ்விழாவில் தம்பதிகளின் புதல்வரும், லண்டன் அருள்மிகு முருகன் திருக்கோயில் அர்ச்சகருமான **ஶிவாகம ப்ரவீணர், கயிலை ஶிவஸ்ரீ R. நாகநாதஶிவம்** அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், கிடாத்தலைமேடு **ஶிவஸ்ரீ S. ஸுப்ரஹ்மண்ய ஶிவாசார்யார்-ஸ்ரீமதீ ப்ரேமாவதீ** அவர்களின் உதவியிடன், **ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்** இயற்றிய **"ஶிவோத்கர்ஷ மஞ்ஜரீ"** என்ற நூல்வெளியிட இருப்பதும் அறிந்து உளம் மகிழ்கிறோம்.

தம்பதிகள் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், நூல் வெளியிடும் பணியில் பேருதவிபுரிந்த அனைவருக்கும் ஸகல நலன்களும் உண்டாகவும் எல்லாம் வல்ல **அபயாம்பிகை உடனுறை மாயூரநாதப் பெருமானின்** திருவடிமலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

அன்புடன்
ஶிவஸ்ரீ A.V. ஸ்வாமிநாத ஶிவாசார்யார்
மயிலாடுதுறை

உ

ஶிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

ஶிவம் பஜாம்ஹ ஶிவஶ்சவ ஹாஸ்லரை
ஶிவம் ஷ்ராஙஃ ஶிவஶேவ கீதஂய ।
ஶிவம் த்ரிஜெஷு வ்ருதிவஂஜயாநிஶம்
ஶிவைகநிஷ்டோ ஹவ தாத ஸவஂயா ॥

-ஶிவஜ்ஞாநவழி

சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்திங்கு பொன்னொளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரையானே

- திருமூலர் திருமந்திரம்

ஶிவபெருமானையே பரம்பொருளாகப் போற்றி வழிபடும் நமது ஶைவஸமயத்தில், அப்பெருமானைப் போற்றித்துதிக்கும் நூல்கள், வடமொழியிலும் தமிழிலும் பல உள்ளன.

ஶிவோத்கர்ஷ-மஞ்ஜரீ என்ற இந்நூல் பரமஶாம்பவரும் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு **ஶிவார்க-மணி-தீபிகா** என்ற ஒரு சிறந்த உரை வரைந்தவருமான **ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்**

Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்களுடைய தம்பியின் பெயரனும் அவரது ஶிஷ்யருமான **ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்** அவர்களால் இயற்றப்பட்டது.

ஶிவபெருமானின் பெருமையை வியந்துபோற்றும் இந்நூலை எங்களது பெற்றோர் **கயிலை ஶிவஸ்ரீ S. ராமநாத அகோர ஶிவாசார்யார்-ஸ்ரீமதீ கங்காபர்வதவர்த்தினி** தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** நன்னாளில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ஶிவபரம்பொருளின் பெரும்புகழைப் போற்றிப் பரவும் இந்நூல் ஶைவஸமய அன்பர்கள் யாவரும் படித்துப் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் வெளியிடப்படுகிறது. இந்நூல் வெளியீட்டைச் செய்ய உதவிபுரிந்த கிடாத்தலைமேடு **ஶிவஸ்ரீ S. ஸுப்ரஹ்மண்ய ஶிவாசார்யார்-ஸ்ரீமதீ ப்ரேமாவதீ** அவர்களுக்கும், இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்து உதவிய பாண்டிச்சேரி ப்ரெஞ்சு ஆய்வியல் நிறுவனத்தின் முதுநிலை ஶைவஸித்தாந்த ஆராய்ச்சியாளர் **ப்ரஹ்மஸ்ரீ Dr. ஸ்ரீ T. கணேஶன்** அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய பெரியோர்களுக்கும், நூலை நல்லமுறையில் அச்சிட்டுத்தந்த **தென்காசி ஶங்கரா ஆய்வு நிறுவனத்தாருக்கும்** எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரன்புடன்

ஶிவஸ்ரீ R. வைத்யநாத ஶிவாசார்யார்
ஸ்ரீமதீ யோகலக்ஷ்மீ, சென்னை
ஶிவஸ்ரீ கயிலை R. நாகநாத ஶிவாசார்யார்,
ஶிவஸ்ரீ கயிலை R. ஸோமநாத ஶிவாசார்யார்,
ஸ்ரீமதீ கமலகுஞ்ஜரீ, லண்டன்.
ஶிவஸ்ரீ R. விஶ்வநாத ஶிவாசார்யார்
ஸ்ரீமதீ விஜயலக்ஷ்மீ, மணல்மேடு

ஶுபம்! ஶுபம்! ஶுபம்!

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உ

ஸ்ரீ குருப்யோ நம:

ஶிவோத்கர்ஷ-மஞ்ஜரீ

ஶிவோத்கர்ஷ-மஞ்ஜரீ எனப் பெயரிய இந்நூல் ஶிவபெருமானின் மேன்மையைப் பறைசாற்றுகின்ற ஓர் அற்புதமான நூலாகும்.

ஶிவ-உத்கர்ஷ-மஞ்ஜரீ என்பதில் **ஶிவ**:-என்ற சொல் ஶிவபெருமானைக் குறிக்கும். **உத்கர்ஷ**:- என்ற சொல் உயர்வு அல்லது மேன்மையைக் குறிக்கும். **மஞ்ஜரீ**- என்ற சொல்லுக்குப் பூங்கொத்து என்பது பொருள். எனவே **ஶிவோத்கர்ஷ-மஞ்ஜரீ** என்பதற்கு ஶிவபெருமானுடைய உயர்வை அல்லது மேன்மையைக் கூறுகின்ற கருத்துப் பூங்கொத்து (கருத்துக்கோவை) என்பது பொருள்.

இந்நூலாசிரியர் பரமஶாம்பவரும் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு **ஸ்ரீமத் ஸ்ரீகண்ட ஶிவாசார்யார்** இயற்றிய உரைக்கு **ஶிவார்க-மணி-தீபிகா** என்ற ஒரு சிறந்த விளக்கஉரை வரைந்தவருமான **ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர்** அவர்களுடைய தம்பியின் பெயரனும் அவரது ஶிஷ்யருமான **ஸ்ரீமந்-நீலகண்ட தீக்ஷிதர்** அவர்களால் இயற்றப்பட்டது.

அப்பய்ய தீக்ஷிதரின் தகப்பனார் ஆசார்ய தீக்ஷிதர் முதல் மிகவும் உயர்வான கவிகளின் பரம்பரையில் அவதரித்த தீக்ஷிதர் அவர்கள் இயல்பாகவே கவிபாடும் திறன் கொண்டவராக விளங்கினார். இவர் இயற்றிய பல நூல்கள் கிடைக்கவில்லை. அவர் செய்ததாக இன்று நாம் அறியக் கிடைக்கின்ற நூல்கள் :

In Public domain. Digitization Muthulakshmi Research Academ

1. முகுந்த விலாஸம்
2. ரகுவீரஸ்தவம்
3. சண்டீ ரஹஸ்யம்
4. ஶிவோத்கர்ஷமஞ்ஜரீ
5. நளசரித்ர நாடகம்
6. குருராஜஸ்தவம்
7. கங்காவதரணம்
8. அன்யாபதேச ஶதகம்
9. நீலகண்டவிஜய சம்பூ
10. கையட வ்யாக்யானம்
11. கலி விடம்பனம்
12. ஸபாரஞ்ஜன ஶதகம்
13. வைராக்ய ஶதகம்
14. ஶாந்தி விலாஸம்
15. ஆனந்தஸாகர ஸ்தவம்
16. ஶிவலீலார்ணவம்
17. ஶிவதத்வ ரஹஸ்யம்

ஆகியன ஆகும்.

இவற்றுள் ஶிவோத்கர்ஷ-மஞ்ஜரியே தீக்ஷிதர் முதன் முதலாகச் செய்தநூல் என்று கருதுகிறார்கள் பெரியோர்கள்.

ஶார்தூல விக்ரீடிதம் எனும் வ்ருத்தத்தில் 53 ஶ்லோகங்களால் அமைந்தது இந்நூல். இதிஹாஸ புராணங்கள் பலவற்றின் வாயிலாக ஶிவபெருமானின் உயர்வையும், பக்தர்களுக்கு அருளும் திறத்தையும் நிலைநாட்டுகிறார் தீக்ஷிதர் அவர்கள்.

இந்நூலின் ஒவ்வொரு ஶ்லோகமும்

ஸ ஷ்ரீ ஜஜ ஷைவதம் தஜிதஸா நாம் நாவி நாம் நாயதெ । என்று நிறைவு பெறுகிறது.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அதாவது ....அவரே எனது கடவுள். அவரைத் தவிர்த்த பிற தெய்வங்களின் பெயர்கூட வேதங்களில் காணப்படவில்லை என்பது இதன் பொருள். ஶிவபெருமான் எந்த விதத்தில் மற்ற தேவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர், அவர் செய்த வீரதீரச் செயல்கள் யாவை?, பக்தர்களின் புறத்தோற்றத்தைப் பாராது அவர்களது பக்தியை மட்டுமே மெச்சி அவர்கள் வேண்டுவதற்கும் மேலாக அருள்வழங்கும் அவரது பேரருட்திறம், பிற தேவர்கள் அனைவரும் ஶிவபெருமானின் அருள்பெற்றே அவரவர்களது செயல்களைச் செய்யும் வல்லமை உடையவர்களாகிறார்கள் என்பது போன்ற பல விஷயங்களை காவ்ய நயத்துடன் அழகாக விளக்குகிறார் தீக்ஷிதரவர்கள்.

ஶிவபெருமானை வழிபடும் பக்தர்கள் ஒவ்வொருவரும் படித்துப் பயனடைய வேண்டிய இந்நூல் பாண்டிச்சேரி **ப்ரஹ்மஶ்ரீ Dr. ஶ்ரீ T. கணேஶன்** அவர்களின் மொழிபெயர்ப்புடன் வெளிவருவது மிகவும் சிறப்பான ஒன்றாகும். அவரது ஸேவை என்றென்றும் தொடரவேண்டும் என்பது எனது பேரவா.

மணல்மேடு, கயிலை ஶிவஶ்ரீ S. ராமநாத-அகோர ஶிவாசார்யார்-ஶ்ரீமதீ கங்கா-பர்வதவர்த்தினி தம்பதிகளின் **ஶதாபிஷேக விழா** நன்னாளில் வெளிவரும் இக்கருத்துப் பூங்கொத்து (இந்நூல் கருத்துக்கள்) ஶைவஅன்பர்கள் மனங்களில் நீங்கா இடம்பெற ஆலங்காட்டில் உறையும் எம் இறைவன் **வண்டார்குழலி உடனமர் வடாரண்யேஶப் பெருமானின்** திருவடிக்கமலங்களை வேண்டிநிற்கின்றோம்.

பேரன்புடன்

ஶிவசரணகமலைக ஶரண்யன்

G. கார்த்திகேய ஶிவம்

திருப்பரங்குன்றம்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

முன்னுரை

பதினாறு பதினேழு நூற்றாண்டுகள் தென்னிந்தியாவின் குறிப்பாகத் தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு மிகவும் முக்கியமான காலம். எல்லா சாத்திரங்களிலும் மற்றும் கலைகளிலும் புதியனவாக ஏராளமான நூல்களும், விளக்க உரைகளும் தோன்றிய காலம் அது. வேலூர், தஞ்சை முதலிய சமஸ்தானங்களையாண்ட நாயக்கர்களும், அவர்களுக்குப் பின் வந்த தஞ்சை மராட்டியர்களும் வைதிகசநாதன தர்மத்தையும், அதன் அடிப்படையிலெழுந்த கலைகளையும் கலை வல்லுநர்களையும் பலவகையிலும் ஆதரித்தனர்.

அந்த வகையில், சிவபக்திக்கும், சைவசாத்திரங்களைக் கற்று அவற்றைப் பல சீடர்களுக்கும் கற்பித்துப் பரப்புவதிலும் பெரும் பங்கு கொண்டவர்களுள் வேலூர் சின்னபொம்ம நாயக்க மன்னரால் பெரிதும் ஆதரிக்கப்பட்ட அப்பயதீக்ஷிதர், அவருடைய தம்பியின் பெயரனான நீலகண்டதீக்ஷிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அக்காலத்திய வரலாற்றைச் சற்று உன்னிப்பாகக் கவனித்தால் இத்தகைய மஹான்களின் ஒப்பற்ற சேவை நமக்கு எவ்வாறு தேவைப்பட்டது என்பது விளங்கும். வைணவத்தின் பிரிவுகளான இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம், மத்வாசாரியாரின் துவைதம் முதலிய சமயங்களின் வளர்ச்சியாலும், அச்சமயாசாரியார்களின் வழிவந்த பிற்காலத்திய ஆசாரியர்களும் தத்தம் கொள்கைகளைப் பரப்புவதற்காகச் சைவத்தை மிகவும் சாடியும், சைவத் தத்துவக்கோட்பாடுகள், சைவ ஆசாரங்கள் ஆகியவற்றைப் பெரிதும் நிராகரித்தும் மக்களிடையே சைவத்தைப் பற்றிய தவறான கொள்கைகளையே பரப்பி வந்துள்ளதை நாம் காண்கிறோம்.

மேலும், வேதம், ஸ்மிருதி மற்றும் புராணங்கள் ஆகிய அனைத்துச் சாத்திரங்களும் விஷ்ணு ஒருவரே பரம்பொருள் என்றும், வைணவச் சமயக்கோட்பாடுகளையும், ஆசாரங்களையும் பின்பற்றுதலே முத்திக்கு வழிவகுக்கும், ஏனைய மார்க்கங்களும் அச்சமய நூல்களும் வைதிக மார்க்கத்திற்குப் புறம்பானவை என்று பலவாற்றானும் தங்கள் நூல்களில்

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அவர்கள் எழுதி வந்துள்ளதால் மக்களிடையேயும், கற்றவர்களிடையேயும் சைவத்தைப் பற்றிய சரியான கருத்துக்கள் நிலவவில்லை. அவ்வாறே சைவ புராணங்களைப் பற்றியும் மிகத் தவறான கருத்துக்களைப் பரப்பி வந்துள்ளனர்.

அத்தகைய காலகட்டத்தில் பல சைவ ஆசாரியர்கள் தமிழ்நாட்டில் தோன்றி வேதங்களுக்கும், சைவ ஆகமங்களுக்கும் சாத்திர அடிப்படையில் விளக்கவுரைகள், தொகுப்பு நூல்கள், மொழிபெயர்ப்புகள் ஆகியவற்றை எழுதி சைவத்தின் உண்மையான கொள்கைகளை நிறுவினர். இதனால் வேதம் முதலான சாத்திரங்களின் கருத்துக்களும், முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைப் பற்றி அந்நூல்களின் அடிப்படைக் கோட்பாடுகளும் நன்கு விளக்கமுற்றன.

இவர்களுள், ஹரதத்தர், சிவலிங்கபூபதி ஆகியோர் சுருதிஸூக்திமாலா, அதற்கு விளக்கவுரையான சதுர்வேததாத்பரியஸங்கிரஹம் முதலிய நூல்களை இயற்றி வேதங்களின் உட்பொருள் சிவபரம்பொருளே. சிவபெருமான் ஒருவரே பரம்பொருள், வேதங்கள் இக்கருத்தையேதான் பலவகையிலும்

Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்தோதுகின்றன என்று அந்நூல்களிலிருந்தே உறுதியான தக்க ஆதாரங்களுடன் நிறுவுகின்றனர். மறைஞானசம்பந்தர், அவருடைய தலைமைச் சீடர் மறைஞானதேசிகர், சிவாக்ரயோகிகள் முதலிய சைவ ஆசாரியர்களும் சைவத்தை நிலைநாட்டு வதற்காகப் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

அடுத்து, 16 ஆம் நூற்றாண்டின் சீரிய புலவரும், எல்லா சாத்திரங்களிலும் புலமை பெற்று விளங்கியதோடல்லாமல் அவ்வனைத்திலும் ஆழ்ந்த கருத்துக்கள் அமைந்த பல நூல்களையியற்றி சருவதந்திரஸ்வதந்திரர் என்று பாராட்டப்பட்டவரும், சிவபக்தர்களிற் சிறந்தவரும், சிவபெருமானின் அவதாரமாகக் கருதப்படுபவருமான அப்பயதீக்ஷிதர் வேலூரையாண்டு வந்த சின்னபொம்ம அரசனின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீகண்டாசாரியார் பிரஹ்மசூத்திரத்திற்கு வரைந்த பாஷியத்திற்கு சிவார்க்கமணிதீபிகா எனும் மிக விரிவானதோர் விளக்கவுரை எழுதிப் பெரும் புகழடைந்தார். சிவபக்தியின் உயர்ந்த நிலையில் சிவபெருமானின் மஹிமைகளையும், சிவபக்தியின் மாட்சியையும் எல்லோருக்கும் எடுத்துரைக்கும் ஏராளமான தோத்திரங்களையும்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அப்பயதீக்ஷிதர் இயற்றியுள்ளார். மேலும், இராமாயணம் மஹாபாரதம் ஆகிய இதிஹாசங்களின் அடிப்படைக் கருத்து சிவபக்தியும், சிவபெருமானின் மஹிமையைப் பறைசாற்றுவது ஒன்றே என்னும் கருத்தை விளக்கி ராமாயணதாத்பரியதங்கிரஹம், பாரததாத்பரியசங்கிரஹம் என்னும் நூல்களையும் அவர் இயற்றியுள்ளார். வேதங்களிலும் புராணங்களிலும் சிவபெருமான் ஒருவரே பரம்பொருளாகவும் முழுமுதற்கடவுளாகவும் போற்றப்படுகிறார் என்பதை அந்நூல்களிலிருந்தே கணக்கற்ற உதாரணங்களை எடுத்துக்காட்டி சிகரிணீமாலா என்னும் தோத்திர வடிவிலமைந்த நூலையும் அதற்கு சிவதத்துவவிவேகம் என்னும் மிக விரிவான வியாக்கியானத்தையும் இயற்றியுள்ளார்.

சின்னபொம்ம அரசனின் வேண்டுகோளுக்கிணங்கி சைவாகமத்தில் விளக்கியவாறு சிவதீக்ஷை பெற்றுக் கொண்டவர்கள் அவ்வாகமத்தில் விதித்துள்ளபடி சிவபூஜை செய்யும் முறையை மிக விரிவாகக் கூறும் சிவார்ச்சனாசந்திரிகா என்னும் நூலையும், சைவாகமங்களில் கூறப்பட்டவாறு சிவபெருமானின் ஐந்து ஆவரணங்களில் அமைந்த தேவதைகள் ஒவ்வொன்றின்

இடம் (ஸ்தானம்), தியானம் செய்வதற்கேற்றவாறு அவற்றின் உருவ அமைப்பு ஆகியவற்றை விளக்கும் சிவதியானபத்ததி என்னும் நூலையும் அப்பயதீக்ஷிதர் இயற்றியுள்ளார். மேற்குறித்தவை அவருடைய முக்கியமான சில நூல்களே. இன்னும் நிறைய நூல்கள் உள்ளன. அவற்றை ஈங்கு விரித்துக் கூறவில்லை.

அடுத்ததாக அப்பயதீக்ஷிதரின் வழித்தோன்றலான நீலகண்டதீக்ஷிதர் இயற்றிய சில முக்கிய நூல்களைப் பற்றி நோக்குவோம்.

இம்மஹானும் ஒரு சீரிய சைவப்பெருந்தகை. சிவபக்தியிலும், சைவக் கருத்துக்களிலும் மிக உறுதியானவர் என்று சொல்வது கூட அவரது அடிப்படைத் தன்மையை எடுத்துக் கூறியதாக ஆகாது. இது அவருடைய நூல்களைப் படித்தால் புலப்படும். அவற்றில் நீலகண்டதீக்ஷிதரின் சிவபக்தியும், நூற்புலமையும் ஒன்றையொன்று மிஞ்சுவதைக் காணலாம். வடமொழி இலக்கியம், இலக்கணம், காவியங்கள் இயற்றும் புலமை ஆகியன அவரிடத்தில் பரிபூரணமாக நிரம்பியிருந்தன. அக்காலத்தில் நிலவிய புலமைக்கும்,

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

வேதம் முதலிய சாத்திரங்களில் அசையாத நம்பிக்கைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர் நீலகண்டதீக்ஷிதர். சிறு வயதிலேயே தாய் தந்தையர்களை இழந்ததால் அப்பயதீக்ஷிதரிடமே கல்வி பயின்றார். அதனுடன் சிவபக்தியும் அவருக்கு ஊட்டப்பட்டது. பின்னர் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்கிணங்கி அவருக்கு மந்திரியாக இருந்தார்.

சிவபெருமான் திரிபுராசுரர்களுடன் போரிட்டு வென்ற கதையை ஒரு சிறந்த காவியமாக விளக்கும் நீலகண்டவிஜயசம்பூ என்னும் அளவில் பெரிய நூல், சிவபெருமான் மதுரையம்பதியில் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களையும் விளக்கும் சிவலீலார்ணவம் என்னும் மற்றொரு காவியம், ஸ்கந்தபுராணத்தின் சங்கரஸம்ஹிதையிலமைந்த சிவரஹஸ்யமென்னும் பகுதியில் உள்ள சிவாஷ்டோத்தரசத நாமஸ்தோத்திரத்திற்கு சிவதத்வவிவேகம் எனும் மிக விரிவானதோர் விளக்கவுரை ஆகியன நீலகண்டதீக்ஷிதரின் முக்கியமான சைவநூல்கள். இவை அளவில் பெரியவை.

Public domain. Digitization Muthulakshmi Research Academ

நாம் இங்கு மொழிபெயர்ப்புக்கு எடுத்துக் கொண்டுள்ளது நீலகண்டதீக்ஷிதர் இயற்றிய சிவோத்கர்ஷமஞ்ஜரி என்னும் சிவஸ்தோத்திரம். இது அவருடைய சிறிய நூல்களில் ஒன்று. 53 விருத்த சுலோகங்களைக் கொண்டது. தோத்திர வடிவில் அமைந்தாலும் சிவபெருமான் எவ்விதத்தில் உயர்ந்தவர், அவருடைய வீரச்செயல்கள், பக்தி ஒன்றையே மெச்சி பக்தர்களுக்கு அவர்கள் வேண்டியதை விட அதிகமாக வழங்கும் அவருடைய குணம், அவருடைய எளிமை, மற்ற தேவர்கள் ஒவ்வொருவரும் அவரிடமிருந்து பெற்ற அருளினால் தத்தம் செயல்களைச் செய்யும் வல்லமைபெற்றது ஆகிய நிகரற்ற குணங்களால் அப்பெருமான் ஏனைய தேவர்களைவிடவும் எவ்வாறு உயர்ந்தவர் (உத்கர்ஷம்) என்பதை ஒவ்வொரு சுலோகத்திலும் மிக அழகாகவும் காவியநயம்படவும் விளக்கி அவை அனைத்தையும் சேர்த்து ஒரு பூங்கொத்தைப் போல் வழங்குவதால் இந்நூலுக்கு இப்பெயர்.

இதில் ஒரு நோக்கவேண்டிய மிக முக்கிய செய்தி என்னவெனில், ஒவ்வொரு சுலோகத்தின் ஈற்றடியிலும் சிவபெருமானின் மஹிமைகளையும்

அசாதாரணமாக விளங்கும் அவருடைய குணநலன்களையும் எடுத்துக் கூறியபின் "அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை" என்று எவ்வித ஐயப்பாடுமின்றி உறுதியாகவும் அறுதியிட்டும் கூறுவது. வேதங்களும் புராணங்களும் மற்றுமுள்ள சாத்திரங்களனைத்தும் சிவபெருமானொருவரையே பரம்பொருளாகப் பறைசாற்றுகின்றன என்று ஐயம் திரிபற நிறுவுவதற்காகத்தான் நீலகண்டதீக்ஷிதர் இவ்வாறு கூறுகிறார். ஒவ்வொரு சுலோகமும் புராண இதிகாசங்களிலிருந்து சிவபெருமானின் அற்புத லீலைகளையும், மஹிமைகளையும் நமக்கு விளக்குகிறது.

இக்கருத்தைச் சிவஞானபோதத்திற்குத் தாம் எழுதிய விரிவான உரையாகிய சிவஞானசித்தியாரிலும் (சுபக்கம், செய்யுள், 115)

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ் செய்யும்
ஆதலான் இவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே.

என்று அருள்நந்திசிவாசாரியார் மிக நயம்பட உரைப்பது இங்கு நோக்கத்தக்கது.

சிவபெருமானின் இத்தகைய மஹிமைகளை மிக அழகாகவும் சிவபக்தியின் சிறப்பையும் விளக்கும் பல நூல்களுள் மிகவும் தலையாயதும் பழமையானதுமாக விளங்குவது புஷ்பதந்தர் எனும் மஹான் இயற்றிய சிவமஹிம்னஸ்தவம். இவர் காஷ்மீரில் வாழ்ந்தவரென்று அறிஞர்கள் கூறுவர். மிருகேந்திராகமமென்னும் சைவாகமத்தின் ஞானபாதத்திற்கு உரையெழுதிய 9-10 நூற்றாண்டுகளில் காஷ்மீரில் வாழ்ந்த நாராயணகண்டர் தமது உரையில் சிவமஹிம்னஸ்தவத்திலிருந்து ஓரிரு சுலோகங்களைப் பிரமாணமாகக் கூறுகிறார். அதன் ஆசிரியரை ஸித்தபாதர் என்று மிக பக்தியுடனும் மரியாதையுடனும் அவர் குறிப்பிடுகிறார்.

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடுத்து, நர்மதை நதிக்கரையில் 12 ஜோதிர்லிங்கங்களுள் ஒன்றான ஓங்காரேசுவரர் ஆலயத்தில் உள்ள 10 நூற்றாண்டுக் கல்வெட்டில் சிவமஹிம்னஸ்தவத்தின் அனைத்து சுலோகங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இந்நூல் மிக மிகப் பழங்காலத்திலேயே பெரும் புகழை அடைந்துள்ளது என நாம் அறிகிறோம். இத்தகைய கணக்கற்ற சிவபக்திச் செல்வர்கள் தாமும் சிவபக்திக்கு இலக்கணமாக வாழ்ந்து, நம்போன்றோரை சிவபக்தியில் ஆற்றுப்படுத்தி நாம் அழியாத சிவப்பேற்றை அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் மேற்கண்ட நூல்களையும் இயற்றியுள்ளனர். அவற்றை அச்சிட்டும், பாராயணம் செய்தும், அதன் மூலம் மாறாத சிவபக்தியை நாமும் கைக்கொண்டு, மக்களனைவரிடத்திலும் பரப்பி நமது வாழ்க்கையின் குறிக்கோளான சிவானந்தப் பெரும் பேறு பெறுவோமாக.

சிவஞானத்தொண்டன்

தி. கணேசன்

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

शिवोत्कर्षमञ्जरी

சிவோத்கர்ஷமஞ்ஜரி

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

शिवोत्कर्षमञ्जरी

சிவோத்கர்ஷமஞ்ஜரி

या लक्ष्मीस्त्रिजगच्छरण्यचरणा तस्याः पतिर्यच्छरो
यद्देयं निखिलैर्वदान्यनिवहैस्तद्यस्य जीर्णं धनुः ।
या संविच्छ्रुतिषु श्रुता रहसि सा यत्पादसंसेविनी
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

மூவுலகிலும் எல்லோராலும் மிகவும் வேண்டப்படுபவளும், அனைத்துச் செல்வங்களையும் வழங்குபவளுமான இலக்குமியின் நாயகராகிய விஷ்ணுவே எவருடைய வில்லுக்கு அம்பாகத் திகழ்ந்தாரோ, தலைசிறந்த அனைத்து வள்ளல்களாலும் தானமாகக் கொடுக்கப்படும் தங்க மயமான மேருமலை எவருக்கு மிகப் பழமையான வில்லாக விளங்குகிறதோ, வேதங்களிலும் உபநிஷதங்களிலும் ஸம்வித் என்று மிகவும் போற்றப்படுவதும், மிக ஸூக்ஷ்மமான தஹராகாசத்தில் விளங்குவதுமான சித்சக்தி எவருடைய திருவடியில் சேவை செய்கிறாளோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 1

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

शिवप्रसादकारणं मनसः प्रसाद एवेत्याह-

अर्चामीति धिया यदेव कुसुमं क्षिप्त्वा जनो मुच्यते
विध्यामीति धिया तदेव विकिरन् भस्मीकृतो मन्मथः ।
इत्याभ्यन्तरवृत्तिमात्ररसिको बाह्यानपेक्षश्च यः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவபெருமானின் அருள் பெற மனத்தூய்மையே இன்றியமையாதது-

சிவபெருமானைப் போற்றி வணங்குகிறேன் என்ற எண்ணத்துடன் பூக்களை அவருடைய திருவடியில் சாற்றி வழிபடும் மனிதன் முக்திப் பேற்றை அடைகிறான். ஆனால் பெருமானைக் குத்திவிடுகிறேன் என்ற எண்ணத்துடன் அதே பூக்களை எய்த மன்மதன் சிவபெருமானால் சாம்பலாக்கப்பட்டான். எனவே, மனோபாவத்தை மட்டுமே மிக முக்கியமாகக் கருதி வெளித்தோற்றத்தைச் சிறிதும் பொருட்படுத்தாத அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 2

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

अशिवमपि सर्ववस्तु यत्सम्पर्केण शिवं भवति तादृशो हि महेश इत्याह-

यत्केशाग्रविलग्नमम्बु जगतां तीर्थं परं पावनं
तद्वीर्यं भुवि दक्षिणेति विहितं यज्ञेषु सर्वेष्वपि ।
श्वानो यस्य तपस्विनां च महतां कामप्रदा धेनवः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

அமங்கலப்பொருட்களும் எவருடைய தொடர்பினால் மங்கலமாகிறதோ அவர்தான் மஹேசுவரன்-

எவருடைய சடை நுனியில் திகழும் கங்கை நீரானது மூவுலகங்களையும் புனிதமாக்குகிறதோ, எவருடைய வீரியமான வெள்ளி அனைத்து யாகங்களிலும் தக்ஷிணையாக வழங்கப்படுகிறதோ, தவம் செய்யும் முனிவர்களுக்கும் மஹான்களுக்கும் அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றும் காமதேனுவான நால்வேதங்களும் எவருக்கு நாய்களாகத் திகழ்கின்றனவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 3

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

श्रीपरमेश्वरमहिमातिशयं सर्वजेतुर्मदनस्य वृत्तान्तेनापि दर्शयति-

वक्त्राब्जेषु पितामहस्य जगतां वक्षःस्थले श्रीपतेः
सर्वाङ्गेषु शतक्रतोरपि दृढानिच्छ्रित्य जैत्रध्वजान् ।
सम्प्राप्तो मदनोऽपि यस्य निटिलज्योतिःपतङ्गायितः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

பரமேசுவரனின் எல்லையற்ற மஹிமையை மன்மதனின் கதைமூலமாக எடுத்துக்காட்டுகிறார்-

உலகங்களைப் படைப்பவரும் தேவர்களுக்கெல்லாம் முதன்மையானவருமான பிரம்மாவின் முகங்களிலும், இலக்குமியின் நாயகனான நாராயணனுடைய மார்பிலும், ஆயிரம் வேள்விகளை இயற்றிய இந்திரனின் உடல் முழுதும் தனது வெற்றிக் கொடியை நாட்டி அவர்கள் அனைவரையும் தன் வசமாக்கிய மன்மதன் எவருடைய நெற்றிக் கண்ணில் விளங்கும் ஜோதியினால் முழுதும் சாம்பலாக்கப்பட்டானோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 4.

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

एवं मदनहापीश्वरः सकलजन्तुसाधारण्येनाविमुक्ते मुक्तिसुखं ददाति-

यद्दातुं कृतलोभ एव परमं धाम स्वभक्तान् पुरा
काकुत्स्थोऽप्यतिसन्दधे स भुवनान्यन्यानि सृष्ट्वा तदा ।
आवेधोमशकं तदेव तृणवद्दत्तेऽविमुक्ते तु यः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ५ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

காமனை வென்று தன்னுடைய மிக உயர்ந்தநிலையை நிலைநாட்டிய பிரான் அவிமுக்தம் என்றழைக்கப்படும் காசிப்பதியில் அனைத்து ஜீவன்களுக்கும் முக்தியின்பத்தை வாரி வழங்குகிறார்-

எந்த மிக உயர்ந்த நிலையான வைகுண்டத்தைத் தன்னுடைய பக்தர்களுக்குக் கொடுப்பதற்காக காகுத்தனாகிய இராமன் பிரம்மதேவனிடம் மேலும் பல உலகங்களைப் படைக்குமாறு கட்டளையிட்டானோ அதைவிட மிக உயர்ந்ததான தனது நிலையைச் சிவபெருமான் மிக எளிமையாகப் பிரம்மன் முதல் ஈக்கள் வரையிலான தன் பக்தர்களுக்கு வழங்குகிறார். அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 5

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यत्कपर्दपतितगङ्गाया दुर्लक्ष्यत्वादपि तत्पारम्यं स्फुटमित्याह-

सेतुं यत्र निबध्य यत्र वसुधामुद्धृत्य मग्नां पुरा
विख्यातो मधुसूदनः स जलधिर्यत्स्रोतसा पूरितः ।
स जाह्नव्यपि यज्जटातनुशिखालम्बाम्बुलेशायिता
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ६ ॥

பெருமான் கங்கையையே தனது சடையில் தாங்கிய பெருமை வாய்ந்தவன்-

இலங்கைக்குச் செல்வதற்காக எதன் மேல் பாலத்தைக் கட்டியும், எதனுடைய நீரின் ஆழத்தில் மூழ்கிய இந்த உலகத்தை மீட்டு வெளிக் கொணர்ந்தும் நிலையான புகழை மதுசூதனாகிய விஷ்ணு அடைந்தாரோ அந்தக் கடலை முழுதும் நிரப்பியது கங்கை நதி. அப்படிப்பட்ட அந்த கங்கையே எவருடைய சடையின் ஒரு நுனியில் சிறு நீர்த்திவலை போல் விளங்குகிறாளோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 6

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

न हीशः कदर्यवदल्पफलाय जनान् क्लेशयति । पुनरक्लेशेनानन्दयतीत्याह-

दातव्यस्त्रिदिवः प्रतिक्षणपरिक्षीणः समस्तैः सुरैः
तद्दानाय च ते कियत्कियदिव व्यापारयन्ते जनान् ।
अक्षय्यं पदमाप्यमत्र च सकृद्यत्कीर्तनं साधनं
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ७ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

ஈசுவரன் உலோபிகளைப் போல் யாதொரு பயனுமின்றி மக்களைத் துன்புறுத்துவதில்லை. மாறாக, மிக எளிதில் அனைவரையும் மகிழ்விக்கிறான்-

சுவர்க்கமானது தேவர்களால் தவமியற்றும் மக்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் அது ஒவ்வொரு கணமும் அழியக்கூடியது. மேலும், அதை வழங்குவதற்காக தேவர்கள் மக்களை எத்தனைதான் கடுமையான தவங்களையும் விரதங்களையும் மேற்கொள்ளுமாறு செய்கிறார்கள். ஆனால், எப்போதும் நிலைபெற்றதும், என்றும் அழியாததுமான சிவபதம் எவருடைய திருநாமத்தைக் கூறுவதாலேயே எளிமையாகக் கிட்டுகிறதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 7

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

यद्वेदैकदेशतत्तन्मन्त्रप्रतिपाद्यतया बह्वभिमन्यन्ते ते वेदाः यद्भवनद्वारि शुनकवत् संचरन्ति तस्य पारम्यं किमु वक्तव्यमित्याह-

मन्त्रे वा क्वचिदर्थवादशकले दिष्ट्या गृहीते सकृत्
स्वे नाम्नि त्रिदशा वहन्ति महतीं कीर्तिं यदीयोक्तिषु ।
श्वानस्ते निगमा यदीयभवनद्वारे चरन्ति स्वतः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ८ ॥

எந்த வேதங்களில் தங்களுடைய பெயர் குறிப்பிடப்படுவதால் தேவர்கள் பெருமிதம் கொள்கறார்களோ அந்த வேதங்கள் எங்கள் பிரானுடைய திருமாளிகையின் முன் நாய்களாகத் திரிகின்றன எனின் அவருடைய மஹிமையை அளவிடவும் இயலுமோ ?-

வேதங்களில் காணப்படும் மந்திரங்களிலோ அல்லது தேவர்களின் பெருமைகளை விளக்கிக் கூறும் மற்ற பகுதிகளிலோ சாதாரணமாகத் தம்முடைய பெயரைக் காண்பதால் தேவர்கள் மனதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றனர். அப்படிப்பட்ட வேதங்கள் எவருடைய திருமாளிகையின் முன்னர் நாய்களாக உலாவுகின்றனவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 8

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

परमशिवस्यैव कालेनानवच्छेदात् सर्वे निगमाः तात्पर्यतस्तमेव प्रतिपादयन्तीत्याह-

यः सान्तानिकलोकदस्तनुभृतां यः सर्वलोकेश्वरः

सोऽप्याहूयत मर्त्यभावभजनात् काले न कालेन किम् ।

तादृक्षोऽपि स कस्यचिद्द्विजवटोस्त्राणाय येनाहतः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ९ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பரமசிவனொருவரே காலத்தினால் கட்டுப்படுத்த இயலாதவர் ஆதலின் வேதங்கள் யாவும் அவரையே தங்களின் உட்பொருளாக எடுத்துரைக்கின்றன-

எல்லா உலகங்களுக்கும் தலைவராக விளங்குபவரும் மனிதர்களுக்கு அவர்களுடைய பக்திக்கு ஈடாகப் பற்பல உயர்ந்த மேலுலகங்களை அருளுபவருமான எந்த விஷ்ணுவானவர் மனித உடல் கொண்டு இராமனாக அவதரித்தபோது முடிவில் மற்றெல்லா மனிதர்களைப் போல் காலனாகிய இயமனால் அழைக்கப்பட்டார். அப்படிப்பட்ட இயமனையே மார்க்கண்டேயன் எனும் ஒரு பிராம்மணச் சிறுவனுக்காகத் தன்னுடைய இடக்காலால் உதைத்த அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 9

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

ऐहिकानामपि सम्पदां दाता शिव एव नान्य इत्याह-

कस्मैचिद्द्विजबन्धवे कियदपि क्षीरं पुरा याचते
दत्तो येन दयारसैकवपुषा दुग्धोद एवार्णवः ।
श्रीश्रीवल्लभकल्पपादपसुधाचिन्तामणिभिः समं
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १० ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உலகச் செல்வங்களையும் சிவபெருமான் ஒருவரே அளிக்க வல்லவர்-

சிறிது பால் வேண்டி அழுத உபமன்யு எனும் பாலனுக்காகப் பாற்கடல், அதனுடன் அதில் தோன்றிய இலக்குமி, அவருடைய நாயகனாகிய விஷ்ணு, விருப்பங்களை யெல்லாம் பூர்த்தி செய்யும் கல்பவிருக்ஷம் ஆகிய அனைத்தையும் அளித்தவரும், கருணையே உருவானவருமான அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 10

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

पाशमोचकः शिव एव सर्वोपास्यः । न पशूनामन्योन्योपास्योपासकतेत्याह-

केनास्माननतिशेरते दिविचराः श्रुत्या गृहीता हि ते

किं नास्मान् श्रुतिराह तान् परतया ब्रूते किमस्मान् स्वकान् ।

सर्वे चेत् पशवो वयं किमितरैः सर्वस्य यो मोचकः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ११ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

பசுக்களைப் பாசபந்தங்களினின்றும் விடுவிப்பவர் சிவபெருமானொருவரே-

வானவர்கள் புவியில் வாழும் நம்மைக் காட்டிலும் எவ்வாறு உயர்ந்தவர்கள் வேதங்களில் அவர்கள் புகழப்படுவதால் நம்மவர்களை வேதங்கள் மிக உயர்ந்தவர்களாகக் கூறவில்லையா - இல்லை. தேவர்களினும் வேறாகத்தான் கூறுகின்றன. அவ்வாறெனின் தேவர்களும் மக்களாகிய நாம் அனைவரும் பாசத்தில் கட்டுண்ட பசுக்களே. நம் அனைவரையும் பாசத்திலிருந்து விடுவிப்பவரும், நம் எல்லோருக்கும் கடவுளானவருமான அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 11

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

अथ संश्लेषया परिसंख्यया हरं स्तौति-

बाणो यस्य न बाणकर्म सहते चक्रे तु ये द्वे तयो-

रेकं चक्रकुलप्रतीपमितरच्चक्रानुकूलक्रियम् ।

ज्या तु ज्यां शिरसा बिभर्ति भुवने सूतो न सूतः क्वचित्

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १२ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலேடை அணியினால் ஹரனைத் துதிக்கிறார்-

எவருக்கு திரிபுராசுரர்களுடன் நடந்த போரில் அம்பாக இருந்து உதவி புரிந்த விஷ்ணுவானவர் பாணாசுரனுடைய செயல்களைப் பொறுக்கவில்லையோ, எவருடைய இரு கண்களுள் ஒன்றான சூரியன் சக்கரவாகப் பறவைகளுக்கு நண்பனாகவும், மற்றொரு கண்ணான சந்திரன் அப் பறவைகளுக்கு எதிரியாகவும் விளங்குகிறார்களோ, எவருக்கு திரிபுராசுரர்களுடன் நடந்த போரில் வில்லின் நாணாக விளங்கிய ஆதிசேஷன் இப்பூவுலகைத் தன் தலையால் தாங்குகிறானோ, எவருக்கு திரிபுராசுரர்களுடன் நடந்த போரில் தேரோட்டியாகத் திகழ்ந்த பிரஹ்மா பிறப்பற்றவரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 12

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

अध्वरपतेर्हरस्यापराधिनः सर्वे नष्टा बभूवुरित्याह-

क्रत्वात्मा पुरुषः क्रतुः क्रतुभुजो वक्ता क्रतूनां क्रतो-

राधारः क्रतुकालकल्पनपरौ सर्वेऽप्यमी संहताः ।

यस्यातिक्रमतः सह क्रतुकृता भ्रष्टाश्च नष्टाः क्षणात्

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १३ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாகங்களுக்கெல்லாம் தலைவரான ஹரனை அவமதித்தோர் அனைவரும் அழிந்தனர்-

யாகங்களுக்கு ஆன்மாவான அக்னி, யஜ்ஞபுருஷன் என்றழைக்கப்படும் விஷ்ணு, யாகக் கிரியை, யாகத்திற்கு ஆசாரியரான சுக்ரன், யாகத்தில் ஹவிர்பாகத்தைப் பெற வந்த இந்திரன் முதலான தேவர்கள், யாகம் நடத்த ஆதாரமாக விளங்கிய யாகசாலை, யாகம் செய்வதற்குத் தகுந்த காலங்களை நிர்ணயிக்கத் துணைபுரியும் சூரியசந்திரர்கள் ஆகிய அனைவரும் எவருடைய ஆணையை மீறி தக்ஷனுடைய யாகத்தில் பங்கு கொண்டதால் அத் தக்ஷனுடன் சேர்த்து ஒரு நொடியில் அழிக்கப்பட்டார்களோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 13

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

सर्वसुरादिवैभवप्राप्तिः श्रीरुद्रानुग्रहादेवेत्याह-

आरोढुं वरमौपवाह्यमपहर्तुं सुन्दरीः कन्यका
भोक्तुं भोज्यमुपस्थितं सुखमलङ्कर्तुं च रत्नैस्तनुम् ।
सन्नह्यन्त्यमृतान्धसो हि शमिते येनैव हालाहले
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १४ ,,

Public domain. Digitization Muthulakshmi Research Academ

தேவர்களின் அனைத்துச் செல்வச் செழிப்பும் சிவபெருமானுடைய அருளினால் தான் விளைந்தது-

எந்த கருணைக் கடலான பெருமான் ஹாலாஹலமென்னும் மிகக் கொடிய விஷத்தை அருந்தி அனைத்துலகங்களையும் காப்பாற்றியதால் தேவர்கள் பாற்கடலை அமிர்தம் வேண்டிக் கடைந்த போது அதிலிருந்து தோன்றிய ஐராவதமென்னும் அழகிய யானையின் மீது ஏறியும், அழகிய அப்ஸரகன்னிகைகளுடன் இன்புற்றும், அக்கடலிலிருந்தே தோன்றிய ஒப்பற்ற இரத்தினங்களால் தங்களை அலங்கரித்துக் கொண்டும், முடிவில் அமிர்தத்தைப் பருகியும் இன்புற்றார்களோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 14

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

शिवः स्वयं नैस्पृह्येण लोकातीतोपि स्वाश्रितान् सर्वस्वदानेन रक्षतीत्याह-

स्वं वासो दशधा विभज्य वितरन्नेकैकखण्डं पुरा

यश्चक्रे दश पाकशासनहुताशादीन् दिशामीश्वरान् ।

यद्भिक्षाशनभागभाक्कि जगतामन्नप्रदात्री शिवा

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १५ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவபெருமான் எவ்விதப் பற்றுமில்லாதிருந்தும் தன் பக்தர்களுக்கு அனைத்தையும் அருளுகிறார்-

திக்குகளையே தனது ஆடையாகக் கொண்ட எந்த பெருமான் அவ்வாடையைப் பத்தாக வகுத்து இந்திரன் முதல் விஷ்ணு ஈறான தேவர்களை அவை ஒவ்வொன்றுக்கும் தலைவராக நியமித்தாரோ, தாருகவனத்தில் மோஹினி வடிவம் தாங்கிய விஷ்ணுவுடன் தானும் சென்று பிக்ஷை ஏற்று அத்தானியத்தைச் சமைத்து அதை மூன்றாகப் பிரித்து பெருமான் இட்ட எந்த ஒரு பகுதியைப் பிச்சையாக ஏற்ற பார்வதியானவள் அதன் மஹிமையால் மூவுலகிற்கும் அன்னம் பாலிக்கும் அன்னபூரணியாக விளங்குகிறாளோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 15

स्वैरं चरतो यस्य चरणलिखितलेखाहेतिमुपलभ्य हरिर्दैत्यारिरभवत्। तादृशो मत्स्वामीत्याह-

स्वच्छन्दं चरतो हि यस्य चरणाङ्गुष्ठाग्रसम्पादिता
रेखा काचन हेतिराजपदवीं प्राप्ता जगद्विश्रुताम् ।
लब्धा दैत्यभिदा तपोभिरुपदीकृत्य स्वकं लोचनं
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १६ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

தன்னிச்சையாகச் சிவபருமான் காலால் எழுதவும், அதிலிருந்து தோன்றிய சக்கரத்தைக் கொண்டு விஷ்ணு அரக்கர்களை வதம் செய்தார்-

எவ்விதத் தடையுமின்றி மூவுலகிலும் சஞ்சாரம் செய்யும் எந்தப் பெருமான் தன் கால் விரலால் நிலத்தில் கீறியபோது உண்டான சக்கரம் அனைத்துலகிலும் எல்லோராலும் போற்றப்படும் சக்கராயுதமாக ஆனதோ, விஷ்ணுவானர் ஆயிரம் தாமரைமலர்களால் எந்தப் பெருமானை அர்ச்சித்து அச்சக்கரத்தை வரமாகப் பெற்று அதன் துணைகொண்டு பல அரக்கர்களை வதம் செய்தாரோ, தக்ஷன் இயற்றிய யாகத்தில் பங்குகொண்ட தேவர்களை கோபம் கொண்ட வீரபத்திரர் அழித்தபோது அவருடைய கபாலமாலையிலிருந்த ஒரு கபாலம் விஷ்ணுவினுடைய சக்கராயுதத்தை விழுங்கவும், விஷ்ணு தன்னுடைய தாமரை மலர் போன்ற கண்ணை எந்தப் பெருமானுக்கு அர்ப்பணித்து மீண்டும் அச்சக்கராயுதத்தை வரமாகப் பெற்றாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 16

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

सर्वाः श्रुतयः साक्षात् प्रणाल्यापि यमेव स्तुवन्ति स एव मत्स्वामीत्याह-

बाणं काचन बाणकोणमितरा बाणस्य मूलं परा

यन्तारं कतिचिद्रथाङ्गमितरा शिष्टाः पुनः स्वामिनम् ।

इत्थं संस्तुवते चिरन्तनगिरः साक्षात् प्रणाल्यापि यं

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १७ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேதம் முதலிய அனைத்துச் சாத்திரங்களும் எந்தச் சிவபெருமானை நேரிடையாகவும், மற்ற வகையிலும் துதிக்கின்றனவோ அவரே எனது கடவுள்-

எந்தப் பெருமானுடைய பாணத்தின் அடிப்பகுதியாக விளங்கும் அக்னியையும், நடுப்பகுதியான ஸோமனையும், நுனிப்பகுதியான விஷ்ணுவையும், தேரோட்டியான பிரஹ்மாவையும், தேர்ச்சக்கரங்களான சூரியசந்திரர்களையும் ஆங்காங்கும், எந்தப் பெருமானை நேரிடையாகவும் போற்றுகின்றனவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 17

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यच्चरणविश्रान्तां श्रुतिवाणीं शृण्वन् पतञ्जलिः शब्दशास्त्रं व्याकरोत् स एव मत्स्वामीत्याह-

प्राचीनेत्यधुनातनेति भुवने वाङ्गाम यावती

तां सर्वां परितः परीत्य चरणे यस्यायतीं विश्रमम् ।

शृण्वन्नङ्गदतां गतः फणिपतिः शब्दागमं व्याकरोत्

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १८ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

எந்தப் பெருமானின் திருவடியிலிருந்து தோன்றிய வேதவாக்கியங்களைக் கேட்டு பதஞ்ஜலி முனிவர் இலக்கணம் வரைந்தாரோ அவரே எனது கடவுள்-

மிகத் தொன்மையான வேதங்களும் நவீனமான இதிஹாஸபுராணங்கள் முதலான அனைத்து நூல்களும் எந்தக் கடவுளின் திருப்பாதங்கள் ஒன்றையே தமக்குப் பொருளாகப் போற்றுகின்றனவோ, எவருடைய கைகளுக்கு ஆபரணமாக விளங்கும் நாகராஜனான ஆதிசேஷன் எவருடைய திருவாக்கைக் கேட்டு இலக்கணசாத்திரத்தை விரித்துக் கூறினாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 18

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

गन्धर्वागमदेशिकौ तनुभृतां यत्कर्णयोः कुण्डले

यत्पादाङ्गदनिर्मितं पदमहाभाष्यं भुवि स्त्यायति ।

पुण्यं पापमिति व्यवस्थितिरियं यद्वाहहेषाकृता

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ १९ ॥

சங்கீதசாத்திரத்திற்கு ஆசாரியர்களான கம்பலன் அச்வதரன் என்னும் இரு நாகர்கள் எவருடைய காதுகளில் குண்டலங்களாக விளங்குகின்றனரோ, எவருடைய திருப்பாதங்களை அலங்கரிக்கும் ஆதிசேஷன் பதஞ்ஜலி முனிவராக மஹாபாஷ்யம் என்னும் மிகப் புகழ் பெற்ற ஸம்ஸ்கிருதமொழி இலக்கண நூலை இயற்றினாரோ, மக்களுக்கு புண்ணியம் பாவம் ஆகியவற்றை உணர்த்தும் வேதங்களே எவருடைய தேரில் குதிரைகளாகத் திகழ்கின்றனவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 19

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

विध्यादिबहुयत्नसाध्यजगत्कार्यमीशस्य मनाक् सङ्कल्पमात्रेण परिसमाप्यत इत्याह-

ध्यात्वा वर्षगणान् बहून् विरचितं यत्नेन यद्वेधसा
यच्छौरिर्बिभराम्बभूव बहुधा भूत्वा च मृत्वा स्वयम् ।
तल्लोकत्रयमीषदुल्लसितयच्चक्षुःस्फुलिङ्गे हुते
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २० ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பிரஹ்மா முதலான தேவர்கள் எந்தச் செயலைப் பலவாறு வருந்தி செய்கிறார்களோ அவை மஹேசுவரனால் மிகவும் எளிதாகச் செய்யப்படுகின்றன-

பிரஹ்மாவானவர் எந்த உலகங்களைப் படைப்பதற்காக எண்ணற்ற ஆண்டுகள் தவமிருந்து அவற்றைப் படைத்தாரோ, மீண்டும் மீண்டும் பல அவதாரங்களில் பிறந்து இறந்து எந்த விஷ்ணுவானவர் அவ்வுலகங்களைத் தாங்கினாரோ அவ்வனைத்துலகங்களும் பிரளயகாலத்தில் எவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஒரு சிறு தீப்பொறியில் எரிந்து சாம்பலாயினவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 20

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

द्वेधा भिन्नमिव स्थितमिदं सर्वं यत्स्वरूपान्न भिद्यते स एव मत्स्वामीत्याह-

सौम्याग्नेयतया क्षराक्षरतया शब्दार्थभावेन वा

जीवब्रह्मतया जडाजडतया स्त्रीपुंसभावेन वा ।

द्वेधा भिन्नं हि यस्य वपुषी सव्यापसव्ये विदुः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २१ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

மாறான இரு குணங்களை உடையதாகப் பிரிந்து நிற்கும் இவ்வுலம் எவரினும் வேறற்றதோ அவரே எனது கடவுள்-

எவருடைய திருமேனி குளிர்ச்சி பொருந்தியதாகவும், வெப்பமுடையதாகவும், அழிவதாகவும் அழிவற்றதாகவும், ஒலியாகவும் பொருளாகவும், ஜீவனாகவும், எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விளங்கும் பிரம்மமாகவும், அறிவற்றதாகவும் அறிவுடைப் பொருளாகவும், ஆணுருவாகவும் பெண்ணுருவாகவும் இரு பகுதிகளாக விளங்குகிறதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 21

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

एवं शिवस्य सर्वात्मकत्वादेव विष्ण्वादेरमृतप्रदानहेतुत्वमस्तीत्याह-

यल्लाभाय पुरा कियद्भिरमरैः सिन्धौ कियद्व्यापृतं
लेभे यत्परिवेषणेन कियतीं कीर्तिं रमावल्लभः ।
यच्चूडाकुसुमक्षरन्मधुरसस्रोतःकणः सा सुधा
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २२ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் ஸர்வாத்மகராய் விளங்குவதாலேயே விஷ்ணு முதலானோர்களால் அமிர்தம் பெறவும், ஏனைத் தேவர்களுக்குக் கொடுக்க முடிந்தது-

எதை அடைவதற்காக முன்னொரு காலத்தில் தேவர்கள் பாற்கடலை அரும்பாடுபட்டுக் கடைந்தனரோ, மோஹினி வடிவம் கொண்டு எதை அசுரர்களிடமிருந்து மீட்டு தேவர்களுக்கு மட்டும் வழங்கியதால் விஷ்ணு அழியாத புகழை அடைந்தாரோ அந்த அமிர்தமானது எந்தப் பெருமானுடைய தலையை அலங்கரிக்கும் பூவிலிருந்து ஒழுகும் ஒரு சிறு துளியோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 22

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यः स्रष्टा जगतां यतोऽयमभवत्तद्यस्य नाभेरभूत्
शेते यत्र स तं च यश्चुलुकयांचक्रे सहान्यैः क्षणात् ।
तादृक्षाः शतशः पुराणमुनयो यच्छिष्यवर्गे स्थिताः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २३ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

விந்திய மலையை அடித்து அதன் வளர்ச்சியைக் குறைத்தது, கிரௌஞ்சமலையை அடக்கியது, கடல் நீரை முழுதும் அருந்தியது, காவிரி முதலான நதிகளைத் தோற்றுவித்தது ஆகிய பல அற்புதங்களைச் செய்த அகத்தியர் போன்ற கணக்கற்ற முனிவர்கள் எவருடைய திருவடிகளை வணங்குகின்றனரோ அவரே எனது கடவுள்-

அகில உலகங்களையும் படைக்கும் பிரஹ்மா தோன்றிய தாமரைமலர் எவருடைய நாபியிலிருந்து தோன்றியதோ அந்த விஷ்ணு எப்போதும் துயிலும் கடலை மற்றவற்றுடன் சேர்த்து ஒரே கையில் எடுத்து அருந்தியவரும் அளவற்ற பெருமை வாய்ந்தவருமான அகஸ்தியர் போன்ற நூற்றுக்கணக்கான முனிவர்கள் எவருடைய சிஷ்யவர்க்கத்தைச் சேர்ந்தவர்களோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. [23]

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

श्रीपरमेश्वरस्य सामर्थ्यं जगत्तन्त्रं च सकलविलक्षणमित्याह-

निर्व्यापारदशैव यस्य जगतीनिर्वाहधौरन्धरी
मन्दस्मेरमुखाब्जतैव परमो यस्य द्विषां निग्रहः ।
नित्यं यस्य च मौनमेव निखिलं छिन्ते सतां संशयं
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २४ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பரமேசுவரனுடைய ஆற்றல் மற்றவர்களுடையதினின்றும் முற்றிலும் மாறுபட்டது-

எந்தப் பெருமான் எதையும் செய்யாமல் இருக்கும் நிலையிலிருந்தே அனைத்துலகங்களையும் படைத்தல் காத்தல் முதலியவற்றைச் செய்கிறாரோ, எவருடைய புன்சிரிப்பே எல்லா எதிரிகளையும் அழிக்கவல்லதோ, எவர் எப்போதும் தன்னுடைய மௌனத்தாலேயே முனிவர்களின் அனைத்து ஐயப்பாடுகளையும் நீக்குகிறாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 24

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

भोगं मोक्षं च शिव एव ददातीत्याह-

दत्ता श्रीरिषवे सिसाधयिषवे वासो गृहीतं सुरैः
सूताय व्ययिता गिरश्च किमितो दातास्म्यहं केवलः ।
इत्यालोच्य दयानिधिर्दिशति यः कैवल्यमेवार्थिनां
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २५ ॥

உலகபோகங்களையும் மோக்ஷத்தையும் சவபெருமான் ஒருவரே அளிக்க வல்லவர்-

பன்னெடுங்காலம் சிவபெருமானை ஆராதனை செய்தவரும் உலகங்களைக் காப்பதையே தனது தொழிலாகக் கொண்டவரும், சிவபெருமானுக்கு அம்பாகத் துணைபுரிந்தவருமான விஷ்ணுவுக்கு செல்வங்களுக்கு நாயகியான இலக்குமியையும், தனது ஆடையான திக்குகளைப் பத்துப் பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் இந்திரன் முதலான தேவர்களுக்கும், அழியாத சொல்லாக விளங்கும் வேதங்களை பிரஹ்மாவுக்கும் வழங்கிய பின் இன்னும் பக்தர்களுக்குக் கொடுப்பதற்கு எஞ்சியது யாது என நினைத்த கருணைக்கடலான எந்த பரமேசுவரன் தன்னை அடைதலாகிய கைவல்லியமென்னும் ஒப்பற்ற செல்வத்தைக் கொடுக்கிறாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 25

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

शारीरः पृथिवी रवीन्दुदहना वायुर्वियत्तोयम्
इत्यष्टाभिश्चिदचिद्गणैः परिणतं विश्वं तनुस्वेति यः ।
विश्वं विश्वविलक्षणः प्रभविता विश्वस्य विश्वाधिकः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २६ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மா, நிலம் முதலான எண்வகையாகப் பிரிந்த உலகம் எவருடைய திருமேனியோ அவரே எனது கடவுள்-

ஆன்மா, நிலம், சூரியன், சந்திரன், நெருப்பு, காற்று, ஆகாயம் மற்றும் நீர் என்னும் ஜடமும் உயிருடையதுமான இந்த உலகே தனது எண்வகைத் திருமேனியாக இருந்தும் எந்த பிரான் இவ்வுலகினின்றும் தனித்து வேறாகவும், இவ்வனைத்துலகங் களையும் காப்பவராகவும், இவற்றிற்கெல்லாம் மேலாகவும் விளங்குகிறாரோ ஆனது தன்னுடைய திருவுடல் அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 26

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

शब्दग्राममयी यदीयगृहिणी ख्याता यदीयं वपुः

त्रैलोक्यं जडचेतनाष्टकमयं यद्घ्राणगुप्तं जगत् ।

सर्वासां दयितो गिरां सकललोकात्मा च सर्वेश्वरः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २७ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

எவருடைய இல்லறத் துணைவியான வேதங்கள் ஒரு சிறந்த கற்புக்கரசியைப் போல் எப்போதும் அவரையே பின் தொடர்கிறாளோ, (வேதங்கள் சிவபெருமான் ஒருவரையே தங்களுக்குப் பொருளாக உடையன என்பது இங்கே கருத்து) எவருடைய திருமேனி மேற்குறிப்பிட்ட ஆன்மா, நிலம், சூரியன், சந்திரன், நெருப்பு, காற்று, ஆகாயம் மற்றும் நீர் என்னும் ஜடமும் உயிருடையதுமான எண்வகையாக விளங்குகிறதோ, எவருடைய வில்லுக்கு அம்பாக விளங்கும் விஷ்ணுவினால் இவ்வனைத்துலகங்களும் காக்கப்படுகின்றனவோ, எவர் அனைத்துச் சொற்களுக்கும் பிரியமானவரோ, எவர் எல்லாவற்றிறகும் தலைவரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 27

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यज्जातीयकणाङ्कितानन महिं जीर्णं कमप्यावसन्

पार्श्वस्थापितपन्नगाशनपतिर्जागर्ति नित्यं हरिः ।

यत्कण्ठभरणायितस्त्रिजगतीभीमः स हालाहलः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २८ ॥

நீலகண்டராகிய பெருமான் ஒருவரே கொடிய ஹாலாஹலவிஷத்தைத் தன் கழுத்தில் எளிதாகத் தாங்குகிறார், ஏனைத் தேவர்கள் அல்லர்-

ஹரியானவர் தனது வாயில் விஷத்தைக் கொண்டதும் வயது முதிர்ந்ததுமான ஆதிசேஷன் மீது துயில் கொண்டாலும் அதன் விஷத்திலிருந்து பயந்தவராய்ப் பாம்புகளுக்கெதிரியான கருடனை எப்போதும் தன்னருகிலேயே அமர்த்தியுள்ளார். ஆனால், எந்தப் பெருமான் மூவுலகங்களையும் அச்சுறுத்தும் ஹாலாஹலமென்னும் கொடிய விஷத்தைத் தன்னுடைய கழுத்திலேயே ஆபரணமாக அணிந்துள்ளாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 28

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

अन्योन्यश्वसिताशनैः फणधरैराविश्य सत्त्वान् बहि-

भुञ्जानैः परिचारकैस्तृणकणैरानन्दिना नन्दिना ।

भिक्षान्नोपचितैश्च दारतनयैः पुष्णाति विश्वानि यः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ २९ ॥

சிவபெருமான் தன்னைக் காப்பதைப் பற்றிய யாதொரு சிந்தனையுமின்றி உலகிலுள்ளோரைக் காப்பதிலேயே கருத்துள்ளவர்-

எவருடைய அணிகலன்களான பாம்புகள் தங்களுடைய மூச்சுக் காற்றையே உணவாகக் கொள்கின்றனவோ, எவருடைய பணியாட்களும் அனைத்து ஜீவராசிகளின் ஆன்மாக்களிலும் வியாபித்து அவற்றைக் காப்பாற்றுவதுமாகிய பூதங்கள் முதலியன தங்களுடைய உணவை வெளியிலிருந்து பெறுகின்றனவோ, எவருடைய வாஹனமாகிய நந்தி எவரும் பொருட்படுத்தாத புல் முதலியவற்றையே உண்கிறதோ, எவருடைய மனையாள் கௌரி, திருமகன்கள் விநாயகன், முருகன் ஆகியோர் பெருமான் பிக்ஷையாகக் கொண்டுவரும் உணவாலேயே மனமகிழ்கிறார்களோ, இவ்வாறிருந்தும் எந்த பிரான் அனைத்துலகங்களுக்கும் எல்லாவற்றையும் அளித்துக் காக்கின்றாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 29

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

केयूराङ्गदहारकुण्डलकटीसूत्रोपवीतीभव-

द्भोगीन्द्रोद्भटफूत्कृतिव्यतिकरोन्मृष्टाङ्गरागो मुहुः ।

संवर्तोपचितैस्त्रिलोकभसितैर्भूयोऽपि यो लिप्यते

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३०

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பரமேசுவரனைத் தவிர ஏனைய தேவர்கள் அனைவரும் பிறப்பிறப்பிற்கு உட்பட்டவர்களே-

எந்தப் பெருமான் தோள்களுக்கு அணிகலனான கேயூரம், கைகளுக்கு அணிகலனான வளையம், கழுத்துமாலை, காதுகளுக்கு ஆபரணமான குண்டலங்கள், அரைஞாண், உபவீதமான முப்புரிநூல் ஆகிய அனைத்துக்கும் பாம்புகளையே அணிவதால் அவற்றின் வாய்களிலிருந்து உமிழும் விஷத்தையே தனது உடல் முழுவதும் கொண்டும், மஹாபிரளயகாலத்தில் எல்லா உலகங்களையும் தனது நெற்றிக்கண் தீப்பொறியால் எரித்து அச்சாம்பலைத் தன்னுடல் முழுவதும் பூசிக் கொள்ளும் அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 30

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

सर्वश्चेतनवर्ग एष पशुतामस्यानुमेने स्वयं

तेषामेष पतिः प्रभुर्नियमने निर्मोचने च स्वतः ।

इत्याम्नायगिरः स्तुवन्ति बहुशः शाखासु शाखासु यं

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३१ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பந்தமும் மோக்ஷமும் சிவபெருமானொருவராலேயே விளைகின்றன-

அனைத்து ஜீவன்களும் எவருக்கு அஞ்ஞானபாசத்தால் கட்டுண்ட பசுக்கள் என்றும், எவரை அப்பசுக்களைக் காத்து, உரிய காலத்தில் ஞானத்தை வழங்கி பாசத் தளையிலிருந்து அவற்றை விடுவிக்கும் ஒரே பரம்பொருள் என்றும் சுருதியாகிய வேதம் தனது ஒவ்வொரு பகுதியிலும் ஐயமற உறுதியாகப் பறைசாற்றுகிறதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 31

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यच्छूलं गतसारमित्युपददे चक्रं जिघृक्षुर्हरिः

तत्खण्डो निहितस्तु येन दनुजे तेनापि दुर्निग्रहः ।

निर्जेतुं लवणं प्रतीक्ष्य विरहः शत्त्याभवत् सर्वद

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३२ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

எல்லாத் தேவர்களினும் சிவபெருமான் ஒருவரே அளவற்ற சக்திவாய்ந்தவர்-

எவருடைய சூலம் மிகப் பழமையானதால் ஆற்றலற்று இருக்குமென்றெண்ணி விஷ்ணு தனது கமலக் கண்ணைச் சமர்ப்பித்து எவரிடமிருந்து சக்கராயுதத்தைப் பெற்றாரோ, அந்தசூலத்தின் ஒரு சிறுபகுதி லவணாசுரனுடைய கையில் இருப்பதால் அவனை வெல்வது அரிது என்றறிந்த இராமபிரான் அவன் அச்சூலத்தைக் கையில் ஏந்தாத நேரத்தை எதிர்நோக்கி அச்சமயத்தில் தான் அளித்த அஸ்திரத்தை ஏவுமாறு தனது தம்பியான சத்துருக்னனைப் பணித்தாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 32

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

मन्नाम्ना श्रुतिरग्रहीदिति सुराः ख्यातिं लभन्ते परां
मां वेदाहमिति श्रुतिः कथयतीत्युत्सिच्यते माधवः ।
ता यद्दोरिषुधन्वमन्युषु नमोवाकान् वहन्ते शतं
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३३ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

வேதங்கள் எங்களுடைய பெயரையே சொல்கின்றன என்று தேவர்கள் பெருமை கொள்கிறார்கள். நான் அப்பரம்பொருளை அறிந்துகொண்டேன் என்னும் சுருதி வாக்கியங்கள் என்னைத்தான் பெருமையுடன் பேசுகின்றன என்று விஷ்ணு மிகக் கர்வம் கொள்கிறார். ஆனால் சுருதிவாக்கியங்கள் எவருடைய புஜங்கள், அம்புகள், வில், மஹாவீரம் கலந்த கோபம் ஆகியவற்றை எண்ணற்ற வாக்கியங்களால் புகழ்கின்றனவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 33

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

सर्गश्च प्रतिसञ्चरश्च जगतां यत्पक्ष्मणी संश्रितौ

शास्त्राणि श्रुतयोऽपि वा यदधरस्पन्दं प्रतीक्ष्यासते ।

बन्धो मोक्ष इति द्वयं तनुभृतां यस्याक्षिकोणे स्थितं

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३४ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

உலகங்களின் தோற்றமும் அழிவும் எவருடைய கண்கள் திறந்து மூடுவதால் நடைபெறுகின்றனவோ, எவருடைய உதடுகளின் அசைவினால் வேதங்கள் அனைத்தும் பிறக்கின்றனவோ[1], ஜீவராசிகளின் பந்தமும் மோக்ஷமும் எவருடைய கடைக்கண் பார்வையாலேயே ஏற்படுகின்றனவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 34

---

[1] நோக்க

यद्वचः कणिका वेदा यल्लीलाकणिका जगत्।

यत्प्रभाविन्दुरिन्द्राद्या नमस्तस्मै पिनाकिने॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

शक्त्यर्धं विनिवेशयामि परिगृह्णीतेत्युपच्छन्दिताः
सम्भूयापि वयं तदर्धवहने न स्मः समर्था इति ।
जग्मुः प्रागमराः शरादिविधया यस्य स्वयं शेषतां
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३५ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்ற தேவர்கள் எந்த பரமேசுவரருடைய சிறிய அம்சமாக விளங்குகிறார்களோ அவரே எனது கடவுள்-

முன்பு திரிபுராசுரர்களைப் போரிட்டு அழிப்பதற்காக எனது சக்தியில் ஒரு பாதியை உங்களுக்கு அளிக்கிறேன் என்று கூறியும் எவருடைய பாதிசக்தியைக் கூட அனைத்துத் தேவர்களும் சேர்ந்து தாங்க இயலாதவர்களாய் அவருக்குப் போரில் துணைபுரிவதற்காக வில்லாகவும், அம்பாகவும், தேரோட்டியாகவும் ஆகி எப்போதும் அவருடைய ஆணைக்குப் பணிபவர்களாக ஆனாரகளோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 35

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यानब्धौ विनिमज्ज्य मीनवपुषा शौरिश्चारायावह-

द्यत्सन्धारणमेकमेव महतां माहात्म्यमुद्घुष्यते ।

यानद्यापि विधिर्बिभर्ति वदनैस्ते यं वहन्त्यागमाः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३६ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

எல்லா தேவர்களாலும் வணங்கப்படும் வேதங்களே எவரைத் தாங்கும் வாஹனமோ அவரே எனது கடவுள்-

ஸோமகன் என்னும் அசுரனால் கடலுக்கடியில் ஒளித்து வைக்கப்பட்ட எந்த வேதங்களை விஷ்ணுவானவர் மிகப் பெரிய மீன் உருக்கொண்டு வெளிக் கொணர்ந்து தாங்குகின்றாரோ, எந்த வேதங்களின் உட்பொருளை அறிவதொன்றே ஞானிகளுக்குப் பெருமையோ, எந்த வேதங்களைத் தனது நான்கு முகங்களால் ஒவ்வொரு சிருஷ்டியிலும் பிரஹ்மா முனிவர்கள் முதலானோருக்கு உபதேசிக்கிறாரோ, அந்த வேதங்கள் திரிபுராசுரர்களுடன் போரிடும்போது எவருக்குத் தேர்க்குதிரைகளாக விளங்கினவோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 36

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

जेतुं त्रीणि पुराणि येन सहसारूढे धरित्रीरथे

वेदाश्वेषु विभुग्नजानुषु वृषो भूत्वा प्रयस्यन् हरिः ।

वोढुं तं न रथं शशाक विधृतं शेषात्मनापि स्वयं

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३७ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

முப்புரங்களை அழிப்பதற்காக நால்வேதங்களும் குதிரைகளாய் இழுக்கும் பூமித்தேரில் எந்தப் பெருமான் விரைவாக ஏறியபோது குதிரைகளின் முழங்கால்கள் வளைந்ததால் ஆயிரம் தலையுடைய ஆதிசேஷனால் தாங்கப்படும் திருமேனியைக் கொண்ட விஷ்ணுவே காளையாக மாறி அத்தேரை இழுக்க முற்பட்டும் இயலாமல் போனாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்பட வில்லை. 37

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

अम्बा यद्गृहमेधिनी त्रिजगतां शब्दान्तराण्यन्तरा
सन्त्यज्योपपदं वदन्ति च जना एकं यमेवेश्वरम् ।
मुक्त्वा च प्रतियोगिनं वदति यत्सूनुं कुमारं श्रुतिः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३८ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

எவருடைய திருநாமம் மூவுலகிலும் புகழ்பெற்றதோ அவரே எனது கடவுள்-

எவருடைய இல்லத்தரசியான பார்வதி மூவுலகங்களுக்கும் அன்னை என்று எல்லா சாத்திரங்களிலும் போற்றப்படுகிறாளோ, எல்லா மக்களும் வேதம் முதலான அனைத்து நூல்களும் எவ்வித அடைமொழியின்றி ஈசுவரன் என்று எவரைப் போற்றுகின்றார்களோ, எவருடைய திருமகன் எவ்வித அடைமொழியின்றி குமாரன் என அழைக்கப்படுகின்றாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 38

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

विश्वं मुञ्च बधान वेति हि परा शक्तिर्यदा ज्ञापिता

ज्ञानेच्छाकृतिशक्तिषु स्वयमिमं विन्यस्य सर्वं भरम् ।

आस्तेऽनुत्तरसामरस्यपरमानन्दानुसन्धायिनी

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ३९ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைத்துலகங்களையும் தனது பராசக்தியின் வாயிலாக இயற்றி, பரமேசுவரன் அசைவற்று எல்லையற்ற ஆனந்தத்தில் நிலைபெற்றிருக்கிறார்-

அனைத்துலகங்களையும் பாசத்தால் பிணை, அவற்றைப் பாசத்தினின்றும் விடுவி என்னும் எவருடைய கட்டளைகளுக்குட்பட்டு பராசக்தியானவள் தன்னுடைய அம்சங்களான ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி ஆகியவற்றிற்கு அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, தான் மட்டில் எவருடன் ஒப்பற்ற பிரிவில்லாத நிலையில் இருந்து கொண்டு அந்த எல்லையற்ற பரமானந்தத்தை எப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறாளோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 39

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

उन्मीलच्चतुरग्रविंशतिशतद्वन्द्वात्मना सङ्ख्यया

निर्भक्तैर्भुवनैः सनेतृभिरपि व्याप्तं कलापञ्चकम् ।

यत्कोट्यंशपराख्यशक्तिकणिकालेशस्य लेशायते

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४० ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

காலாக்னிபுவனம் தொடங்கி அநாச்ரிதபுவனமீறான இருநூற்றிருபத்துநான்கு புவனங்கள், அவற்றின் தலைவர்கள் ஆகியோர்களால் வியாபிக்கப்பட்ட நிவிருத்தி, பிரதிஷ்டா, வித்தியா, சாந்தி, சாந்தியதீதா என்னும் ஐந்து கலைகளும் எவருடைய பராசக்தியின் கோடியில் ஒரு பகுதியின் திவலையோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 40

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यस्यानन्दमहार्णवस्य कणिका या काप्यविद्यानिल-
व्याधूता शतधा विभिद्य भुवनं व्याप्ता श्रुतीनां गणैः ।
ब्रह्म त्वं तदसीति वादमुखरैरद्यापि चान्विष्यते
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४१ ॥

எவருடைய பரமானந்தக் கடலினின்றும் தோன்றிய ஒரு துளியானது அவித்தியை எனும் காற்றினால் உந்தப்பட்டு பல நூறு மடங்காகப் பிரிந்து இவ்வுலகை அடைந்து நீயே பிரம்மம் என்னும் வேதவாக்கியங்களை அறிந்துணர்வதன் வாயிலாக ஞானிகளால் இன்றுவரை தேடப்பட்டுவருகிறதோஅந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 41

Public domain. Digitization Muthulakshmi Research Academ

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

श्रेयः संसरतां किमस्ति परमं नामापवर्गाच्च नः
तद्दानादधिको न कश्चन गुणोऽस्त्यस्मद्धियां गोचरः ।
तद्यद्दर्पणसम्प्रसादसुलभं नालं यदीयस्तुतौ
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४२ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சம்சாரக்கடலில் உழலும் நம்போன்றோருக்கு முக்தியைத் தவிர வேறு சிறந்த நிலை இல்லை. அத்தகு பெருமை வாய்ந்த முக்தியை அளிப்பதினின்றும் சிறந்த வேறொரு நற்குணத்தை நாம் அறியோம். அவ்வாறான முக்தியை எங்கள் பிரான் ஒரு கண்ணாடியைத் துடைப்பது போல மிக எளிதாக வழங்குகிறார் என்று கூறுவது கூட எவருடைய மஹிமையை எடுத்துரைக்கப் போதாதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 42

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

प्लुष्टे स्थावरजङ्गमे शतधृतौ नष्टे जगत्स्त्रष्टरि
व्याप्ते दैत्यरिपौ हरेण विहरत्यस्मिन् महेशात्मना ।
अन्तर्भावयितुं स्वयं तमपि यस्येमे गणाः साक्षिणः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४३ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academ

அனைத்துலகுக்கும் ஒரே நாயகரான சிவபெருமான் ஒருவரே பிரளயத்திற்குப் பின்னரும் எஞ்சியிருக்கிறார்-

பிரளய காலத்தில் உலகிலுள்ள அனைத்து ஜடப்பொருள்களும், அறிவுடைய ஜீவன்களும் எவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய சோதியில் எரிந்து சாம்பலாயினவோ, பிரஹ்மா முதலான எல்லா தேவர்களும், இந்திரன் முதலானோர்களும் அழிந்த பின்னரும் எந்த பிரான் அந்த பயங்கர ருத்ர வடிவத்தை மறைத்து மஹேசுவரனாக நந்தி, மஹாகாலர் முதலிய கணங்கள் காணும்படி தனித்து உலாவருகிறாரோ, அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 43

नाशव्याप्यममङ्गलं तदितरं माङ्गल्यमेवं स्थिते

नश्यद्दैवतधारितैरलमलङ्कारैरभव्यैरिति ।

नित्यैर्भस्मभिरेव भूषयति यः स्वाङ्गं जगन्मङ्गलं

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४४ ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவபெருமான் ஒருவரே எல்லா மங்கலங்களையும் உடையவர்-

எவையெல்லாம் அழிவனவோ அவை மங்கலப்பொருட்களல்ல. இவற்றினும் வேறாக எது அழியாமல் எப்போதும் நிலைபெற்று விளங்குகிறதோ அதுவே மங்கலமானது. இவ்வாறிருக்க, மஹாபிரளயகாலத்தில் உலகிலுள்ள அனைத்து ஜடப்பொருள்களும், அறிவுடைய ஜீவன்களும் எவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய சோதியில் எரிந்து சாம்பலாகும் போது பிரஹ்மா முதலான எல்லா தேவர்கள் தோற்றத்திற்கு அழகான பீதாம்பரம், பொன்னாலான ஆபரணங்கள் ஆகியவற்றை அணிந்து தங்களை அலங்கரித்துக் கொண்டாலும் அவை யாவும் அமங்கலமே. ஆனால், எந்த பிரான் எப்போதும் அழிவற்ற திருநீற்றையே தனது உடல் முழுவதும் பூசி அலங்கரித்துக் கொள்கிறாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 44

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

गङ्गाङ्गाम्भःपरिशोषणं स्मरमदोच्छेदो जगद्दाह इ-

त्याद्यं निग्रहवैशसं कलयते कण्ठादुपर्येव यः ।

अन्तः सन्ततमीहते तु शिवमाकीटं जगन्मात्रके

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४५ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் உலகை அடக்கி அழிப்பதன் மூலம் அருளைத்தான் புரிகிறார்-

கங்கை நீரை முழுதும் வற்றச் செய்தது, மன்மதனைத் தனது நெற்றிக்கண் நெருப்பால் எரித்து அவனுடைய இறுமாப்பை அடக்கியது, பிரளய காலத்தில் உலகிலுள்ள அனைத்து ஜடப்பொருள்களையும் எரித்தது போன்ற வெளித்தோற்றத்திற்கு கொடுமையாகத் தோன்றும் எவருடைய செயல்கள் அவருடைய கழுத்துக்கு மேலே விளங்கும் நெற்றிக்கண் மற்றும் சடை ஆகியவற்றால் மட்டுமே செய்யப்பட்டு, எவருடைய உள்மனது அனைத்துலகங்களுக்கும் நன்மை ஒன்றையே விரும்புகிறதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 45

Public domain. Digitization Muthulakshmi Research Academ

अभ्यर्चन्ति यमामनन्ति यमनुध्यायन्ति यं सन्ततं
गीर्वाणाः फणिनो नरा इति किमित्याश्चर्यमाचक्ष्महे ।
यो देवः स्वयमप्यसौ शिवमनुध्यायन् शिवत्वं गतः
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४६ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைவரும் சிவபெருமான் ஒருவரையே தியானிப்பது போல் பெருமானும் எல்லோருக்கும் மங்கலம் ஒன்றையே நினைக்கிறார்-

தேவர்கள், நாகர்கள், மனிதர்கள் முதலானோர் இடையறாது எந்தப் பெருமானை அர்ச்சித்தும், போற்றியும், தியானித்தும் வழிபடுகிறார்களோ, எந்தப் பெருமான் எப்போதும் அனைத்து ஜீவராசிகளுக்கும் மங்கலமான சிவத்துவம் ஒன்றையே மனதில் நினைத்து சிவமாகவே விளங்குகிறாரோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 46

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यास्वप्सु द्रुहिणोऽजनिष्ट धरणौ यत्रावतारो हरे-

लिंल्ये यत्र हुताशने त्रिजगतां माता विदेहात्मजा ।

तद्भूतत्रयमप्यभूदचतुरं यत्तेजसो धारणे

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४७ ॥

பிரஹ்மா தோன்றுவதற்காதாரமான நீர், விஷ்ணு பல அவதாரங்கள் எடுத்த பூமி, உலகங்களுக்கன்னையான சீதை புகுந்த நெருப்பு ஆகிய மூன்று பூதங்களாலும் எந்தப் பெருமானுடைய அளவற்ற தேஜஸான சக்தியைத் தாங்க இயலவில்லையோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 47

Public domain. Digitization Muthulakshmi Research Academ

यद्धर्मानुचिकीर्षया प्रववृते भिक्षाश्रमोऽनुत्तमो

यद्वास्यव्रतलाञ्छनं परमिति ख्याता विभूतिः श्रुतौ ।

यत्सूक्तिश्रवणेच्छया सुकृतिनो मुञ्चन्ति काश्यामसून्

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४८ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

Public domain. Digitization Muthulakshmi Research Academ

எந்தக் கடவுளால் பின்பற்றப்படும் தூய வெண்ணீறு அணிதல், சடைகளைத் தரித்தல், பிக்ஷை எடுத்து உண்ணுதல் ஆகிய தருமங்களை மக்கள் பின்பற்றுவதற்காகத் துறவறம் என்னும் ஒப்பற்ற ஆசிரமம் ஏற்பட்டதோ, எந்த பிரானுக்கு மீளா அடிமையாக விரதம் பூண்டதற்கு அடையாளமாக உடல் முழுதும் வெண்ணீறு அணிதல் எல்லா சாத்திரங்களிலும் போற்றிப் பரவப்படுகிறதோ, எவருடைய ஒப்பற்ற சொற்களான தாரகமந்திரத்தைக் கேட்பதற்காக காசிப்பதியில் மக்கள் தங்கள் வாழ்நாட்களின் கடைசிப்பகுதியைக் கழித்து உயிரைத் துறக்கிறாரகளோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 48

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

यत्सारथ्यपदस्थितेः शतधृतेयायुः परार्धाधिकं
शौरेर्यं प्रति मार्गणत्वमयतो जागर्ति लक्ष्मीः स्थिरा ।
यत्पादाश्रयिणः फणाधरपतेर्वाचः प्रथन्तेतरां
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ४९ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவருக்குத் தேரோட்டியாகப் பணிபுரிந்ததால் பிரஹ்மாவின் ஆயுள் பல்லாயிரம் ஆண்டுகள் அதிகரித்ததோ, எவருக்கு அம்பாகப் பணியாற்றியதால் விஷ்ணுவை விட்டு சுபாவத்தில் சஞ்சலமான இலக்குமி கூட அகலாமல் இருக்கிறாளோ, எவருடைய கால்களுக்கு அணிகலனாக இருப்பதால் நாகங்களின் அவதாரமான பதஞ்ஜலியின் திருவாக்கான மஹாபாஷ்யம் மிகவும் போற்றப்படுகிறதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 49

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

पारम्ये निगमागमाः परमसौलभ्ये पिशाचादयो

वाञ्छातीतपदार्पणे स भगवान् वैयाघ्रपादो मुनिः ।

सर्वांगःसहनेऽन्धकश्च दनुजो यस्य स्थिताः साक्षिणः

स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ५० ॥

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

சிவபெருமானின் எல்லையற்ற ஆற்றலுக்கு சாட்சிகள் பல-

எந்தக் கடவுளின் எல்லாவற்றிற்கும் மேலான ஒப்பற்ற நிலைக்கு வேதங்களும் சாத்திரங்களும் சாட்சியோ, எவருடைய மிகவும் எளிமையான சுபாவத்திற்கு அவருடைய கணங்களான பிசாசங்கள் சாட்சியோ, விரும்பியதை விட மேலும் வழங்கும் எவருடைய சுபாவத்திற்கு வியாக்ரபாதமுனிவரின் மகனான உபமன்யு சாட்சியோ, எல்லாப் பாவங்களையும் பொறுத்தருளும் எவருடைய குணத்திற்கு அந்தகாசுரன் சாட்சியோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 50

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

सारा: शब्दकुलस्य येन निगमा वाहा इति स्वीकृता:
सारावद्रिषु कार्मुकं गृहमिति द्वौ हेमरूप्यौ हृतौ ।
सारा वारिषु जाह्नवी च विधृता भक्तानुकम्पाच्छलात्
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥ ५१ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Academy

அனைத்துப் பொருள்களிலும் அமைந்த சாரத்தைக் கொள்பவர் சிவபெருமான் ஒருவரே-

அனைத்துச் சொற்களுக்கும் சாரமாகத் திகழும் வேதங்கள் எந்த பிரானால் குகிரைகளாகக் கொள்ளப்பட்டனவோ, மலைகளுள் மிகச் சிறந்தவையான தங்கமலை (மேருமலையும்) வெள்ளிமலை (கயிலாயமும்) முறையே வில்லாகவும், இருப்பிடமாகவும் கொள்ளப்பட்டனவோ, நீர்களுள் சிறந்ததும் புண்ணியமானதுமான கங்கை நதி பக்தர்களின் மீதான கருணையினால் எவருடைய சடைமுடியில் தாங்கப்பட்டதோ அந்தச் சிவபெருமான் ஒருவரே நான் வணங்கும் ஒப்பற்ற ஒரே கடவுள். ஏனைத் தெய்வங்கள் வேதம் முதலான நூல்களில் பெயரளவில் கூட கூறப்படவில்லை. 51

भूमिर्भ्राम्यति बद्ध एव मरुति प्रत्यग्भ्रमोऽत्यद्भुतो

भ्राम्यन्त्येव सहाश्रयेण च दिवि ज्योतींषि सर्वाण्यपि ।

आवर्तोऽयमपां भ्रमः परिणतो मूर्तिर्हरस्याष्टमी

यासावप्पयदीक्षितो जयति सा त्वेका निरस्तभ्रमा ॥ ५२ ॥

Public domain. Digitization Muthulakshmi Research Acader

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

பூமி சுழல்கிறது, பிராணாயாமத்தின் மூலம் காற்றை அடக்கினால் அதுவும் சுழல்கிறது. வானத்துக் கிரஹங்களும், நட்சத்திரங்களும் சுழல்கின்றன. அவ்விதமே நீரும் சுழல்கிறது. சிவபெருமானின் எண்வகைத் திருமேனியில் ஏனைய ஏழும் சுழலும் போது அவருடைய எட்டாவது மூர்த்தியான அப்பயதீக்ஷிதர் மட்டுமே எவ்விதக் குழப்பமுமின்றி எப்போதும் சுழலாமல் விளங்குகிறார். 52

n Public domain. Digitization Muthulakshmi Research Academ

Public domain. Digitization Muthulakshmi Research Acade

n Public domain. Digitization Muthulakshmi Research Academ